DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 417/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரவிந்திரன் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ. பால்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.12.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது முள்ளிமுனையில் குடியிருந்து வருகிறேன். மீன் வியாபாரம்செய்து வருறேன். அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் 04.12.2022 தேதி மாலை சுமார் 5 மணியளவில்நடந்தது. அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எனது கொளுந்தியாள் நதியா(தங்கராசு மனைவி) என்பவரது தாலிசெயினை யாரோ வீடு புகுந்து இரவில் திருடிசென்றுள்ளார்கள். இதுசம்மந்தமாக

புகார் கொடுப்பதற்காக தொண்டி காவல் நிலையத்திற்கு செல்வதற்கு நான் முன்னாள் ஊராட்சி தலைவராக இருந்ததால் தங்கராசு என்னையும் அழைத்து கொண்டு சென்றார். நான் கைலி உடுத்தியிருந்ததால் காவல் நிலையத்திற்குள் செல்லவில்லை வெளியே தான் நின்று கொண்டிருந்தேன். தங்கராசு தான் சென்று புகார்கொடுத்தார். போலிசார் அவரிடம் விசாரிக்கும்போது யார் மீதாவது சந்தேகம் உள்ளதா என்று கேட்டதற்கு தங்கராசு 5 நபர்கள் மீது சந்தேகம் இருப்பதாக கூறியுள்ளார். அதில் ஆஜர் எதிரியின் அண்ணன் மகன் பெயரையும் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன்.

2. அதன்பிறகு போலிசார் அந்த 5 பேரையும் அழைத்து விசாரித்துள்ளார்கள். இந்நிலையில் 04.12.2022 ம்தேதி நானும் எனது மனைவியும் ராமநாதபுரம் சென்று விட்டு இருசக்கரவாகனத்தில் முள்ளிமுனைக்கு வரும்போது மாலை சுமாா 5 மணியளவில் எங்கள்ஊரை சேர்ந்த பட்டாணி என்பவரது வீட்டின் அருகே வரும்போது ஆஜர் எதிரி எங்களை வழிமறித்தார். நான் இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது எனது மனைவியை பிடித்து கீழே தள்ளிவிட்டார்.என்னை சட்டையை பிடித்துகிழித்து நகத்தால் கீறியதால் எனக்கு நெஞ்சில் இரத்த காயம் ஏற்பட்டது. (சாட்சி காயத்தழும்பை காட்டி சாட்சியம் அளிக்கிறார்.)

3. ஆஜர் எதிரி எப்படி எனது அண்ணன் மகன் பெயரை காவல் நிலையத்தில் நீ சொல்லாம் என பேசி தாயோழி வேசிமகனே, என்று அசிங்கமாக பேசினார்.அது நடக்கும்போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்கள். அங்கு இருந்த குமார் மற்றும் வள்ளி எங்களை விலக்கிவிட்டார்கள். அதன்பிற்கு எனது மனைவியை அழைத்து கொண்டு இருசக்கரவாகனத்திலேயே தொண்டி காவல் நிலையம்சென்று எனதுமனைவி நடந்த சம்பவத்திற்கு புகார்அளித்தார். புகாரை நான் தான் எழுதினேன். பிறகு திருவாடானை அரசுமருத்துவமனைக்கு வந்து வெளிநோயாளியாக எனது காயத்திற்கு சிகிச்சை பெற்றுகொண்டேன். எனது மனைவிக்கு கீழே தள்ளிவிட்டதில் ஊமைக்காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கும் வந்தும் விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in open court,interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.